# என் மீதான அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள்

ஹஜ்ஜூல் அக்பர்

2021.03.11

# என் மீதான அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள்

ஹஜ்ஜுல் அக்பர்

2021.03.11

# உள்ளடக்கம்:


*1.* *நுழைவதற்கு முன்*

*2.* *விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு குற்றம் சாட்டப்பட்டேன்*

*3.* *நான் வெளிப்படையாக வாழ்ந்தவன்*

*4.* *இஸ்லாத்திலுள்ள கருத்து வேறுபாடுகளோ அல்லது நாட்டிலுள்ள மத வேறுபாடுகளோ என்னை சகிப்புத்தன்மையற்றவனாக மாற்றவில்லை.*

*5.* *இஸ்லாம் தொடர்பில் எனது அணுகுமுறை*

*6.* *இஸ்லாமிய ராஜ்யம் என்ற போலிக் குற்றச்சாட்டு*

*7.* *இஸ்லாமிய ராஜ்யம்: குற்றச்சாட்டுக்கான பதில்*

*8.* *நானும் இந்த சிந்தனைக்கு எதிரானவன்.*

*9.* *கமிஷனில் எனக்கெதிராக வந்த சாட்சிகள் பற்றி...*

*10.* *புலனாய்வுத் துறையினருக்கு தகவல் வழங்கப்பட்டது*

*11.* *சாதிக் தொடர்பில் அவர்கள் என்மீது வைத்த குற்றச்சாட்டு*

*12.* *அல்ஹஸனாத் ஜிஹாதை ஊக்குவிக்கவில்லை*

*13.* *தீவிரவாதிகள் எதனால் உருவானார்கள்? தீவிரவாதிகள் வழங்கிய வாக்குமூலங்கள்*

*14.* *என்னை அறிந்தவர்கள் என்னை தீவிரவாதியாக பார்க்கவில்லை*

*15.* *மக்களது மனப்பாங்கும் தீவிரவாதத்திற்கு எதிரானதே!*

*16.* *இஸ்லாமிய ராஜ்யம் சாத்தியமாவது எப்படி? நீங்கள்தான் கூற வேண்டும்...*

*17.* *ஹஜ்ஜுல் அக்பரின் நிலை*

*18.* *இறுதியாக...*

# 01. நுழைவதற்கு முன்..

*ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னாலுள்ள சூத்திரதாரி யார்? ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் அந்த சூத்திரதாரி பற்றி எதுவும் கூறப்படவில்லை. 'ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னணிகள் குறித்த அறிக்கையில் மொத்தமாக மறைக்கப்பட்டு விட்டன. எனவே அவ்வறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது,' என்ற விமர்சனம் பாரியளவில் எழுந்து அறிக்கை பற்றிய சர்ச்சைகள் பரபரப்பாக எழுப்பப்பட்டு விருகின்ற சூழலில்...*

*ஒரு சந்தர்ப்பத்தில் 'தீவிரவாத சிந்தனை'என்று அது கூறப் படுகிறது. மற்றுமொரு சந்தர்ப்பத்தில் நபரொருவரின் பெயர் அதிலே சம்பந்தப்படுத்தப்படுகிறது. மற்றுமொரு வேளையில் இஸ்லாமிய அமைப்புக்கள் என்று அது சித்தரிக்கப்படுகின்றது. மற்றும் சிலர் 'ஸஹ்ரான்'தான் சூத்திரதாரி என்கின்றனர்.*

*சூத்திரதாரி பற்றி தெளிவற்ற குழப்பமானதொரு நிலை காணப் படுகிறது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. எங்காவது ஒரிடத்தில் முடிச்சுப் போட்டு யாருடைய தலையிலாவது இந்தப் பாரத்தைப் போட்டுவிடுவோம் என்ற முனைப்பும் தென்படுகிறது.*

*இவற்றுக்கு மத்தியில் உண்மைகளை நன்குணர்ந்தவர்கள் நாட்டில் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை ஆறுதல் தருகின்றது. அவர்கள்தான் விசாரணையாளர்கள் நீதித்துறை சார்ந்தவர்கள். அவர்கள் நாலு கதையைக் கூறி சம்பந்தமேயில்லாமல் ஐந்தாவது இடத்தில் முடிச்சுப் போடுபவர்களல்லர். அவர்கள் உண்மைகளை அறிவதற்கு அதன் முறைமைகளை நம்புபவர்கள். அத்தகையவர்களது பார்வைக்காக என்னைப் பற்றிய உண்மைகளை முன்வைக்கிறேன்.*

**ஆர். ஹஜ்ஜுல் அக்பர்**
**2021.03.11**

# ௨. விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு குற்றம் சாட்டப்பட்டேன்

*ஈஸ்டர் தின தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையைப் பலரும் பல்வேறு கோணங்களில் விமர்சிப்பதோடு அதனை ஏற்றுக் கொள்ள முடியாதுஎனவும் கூறி வருகின்றனர்.*

*அந்த அறிக்கையால் அதிர்ச்சிக்குள்ளாகியவர்களுள் நானும் ஒருவன். அறிக்கை என் மீது சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டுக்களை அவதானிக்கும்போது எனது உண்மையான நிலையைப் புறக்கணித்து என்னைப் பற்றிய போலியான பயங்கரமானதொரு பிம்பத்தைத் தோற்றுவிப்பதாகவே தோன்றுகின்றது.*

*நான் 2019ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப் பட்டவன் என்ற வகையில் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய தொரு விடயமும் இருக்கின்றது.*

*அப்போது என்னைக் கைது செய்தவர்கள் என் மீது எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்தவில்லை. மாறாக விசாரணைக்கு அழைத்துச் செல்கிறோம் என்று கூறி அழைத்துச் சென்ற பின்னரே நான் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள்.*

*அவ்வாறு அழைத்துச் சென்ற மறுநாள் சில சிங்களப் பத்திரிகைகள் என் மீதான குற்றசாட்டுக்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு விட்டதைப் போன்று மிக மோசமான வகையில்*

சோடனை செய்து பிரசுரித்திருந்தன. அக்குற்றச்சாட்டுகள் அனைத்தும் போலியானவை, அபாண்டமானவை என அப்போதே எமது மக்கள் பேச ஆரம்பித்தனர். எனது உண்மை நிலையை வலியுறுத்தி எனக்காக எழுதவும் பேசவும் செய்தனர்.

அதே குற்றச்சாட்டுகள்தான் இப்போது ஆணைக்குழுவின் அறிக்கையில் எனக்கெதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது இக்குற்றச்சாட்டுகள் ஆய்ந்தறிந்து கண்டுபிடிக்கப்பட்டவையல்ல மாறாக எங்கோ யாராலோ ஊகங்களின் அடிப்படையில் முன்முடிவுகளோடு தயாரிக்கப்பட்டவைகள் என்றே புலனாகின்றது.

இந்த வகையில் இக்குற்றச்சாட்டுக்களை நான் முற்றாக மறுக்கிறேன். இதே குற்றச்சாட்டுக்கள் நன்கு விசாரிக்கப்பட்ட நிலையில்தான் நான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டேன் என்பதும் இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

## 3. நான் வெளிப்படையாக வாழ்ந்தவன்

தற்போது எனது வயது 60ஐ எட்டி விட்டது. இதுவரை காலமும் நான் இலங்கையில்தான் வாழ்ந்திருக்கிறேன். ஒரு வாரம், ஐந்து நாள், நான்கு நாள் போன்ற குறுகிய பயணங்களை மேற்கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததல்லாமல் எனது படிப்பு, தொழில், வாழ்க்கை அனைத்தும் இலங்கையில்தான்.

எனது ஆரம்பக் கல்வியை நாவலப்பிட்டி சென். மேரிஸ் கல்லூரியில் சாதாரண தரம் வரை முடித்து விட்டு அடுத்ததாக பேருவளையிலிருக்கும் ஜாமிஆ நளீமிய்யா என்ற கலாபீடத்தில் இஸ்லாமியக் கற்கைகளுக்கான கல்வியைத் தொடர்ந்தேன். ஏழு வருட காலம் அங்கு கழிந்த பின் மாதம்பை ஜும்ஆ பள்ளிவாசலில்

போதகராக கடமையாற்றினேன். அதனைத் தொடர்ந்து 1987இல் இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி என்ற ஸ்தாபனம் அதே ஊரில் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அதில் ஓர் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் கடமையாற்றியிருக்கிறேன். இக்காலப் பகுதியில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியில் அங்கத்துவத்தைப் பெற்ற நான் 1994ம் ஆண்டு வரை இஸ்லாஹிய்யாவில் பணியாற்றி விட்டு 1994ம் ஆண்டு SLJI இன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். அது முதல் இஸ்லாஹிய்யாவை விட்டு SLJI இன் தலைமைப் பதவியில் 2018ஆம் ஆண்டு வரை இருந்துள்ளேன். தற்போது SLJI இன் மத்திய ஆலோசனை சபை உறுப்பினர்களுள் ஒருவராக இருக்கிறேன். இதுதான் எனது வரலாற்றின் சுருக்கமாகும். எனது இந்த வரலாற்றில் தெளிவற்ற மயக்கமான காலப் பகுதியென்று எதுவுமில்லை.

SLJI இன் தலைவராக இருந்த காலப் பகுதிகளில் மூன்று நோக்கங்களுக்காக குறுகிய பயணங்களை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளேன்.

1. SLJI இற்கு வந்த உத்தியோகபூர்வ அழைப்புகளை ஏற்று மாநாடுகளில் பங்குபற்றல். (இதற்கான சகல செலவுகளையும் மாநாட்டு ஏற்பாட்டாளர்களே வழங்குவார்கள். அவ்வாறு வழங்காதபோது பயணங்களை மேற்கொள்வதில்லை. இத்தகைய பயணங்களுக்கான வீசாக்களை அந்தந்த நாட்டு அரசாங்கங்களே வழங்கியுள்ளன.)

2. வெளிநாடுகளிலுள்ள இலங்கை வாழ் முஸ்லிம்கள் ரமழான் காலங்களிலோ அல்லது கோடை விடுமுறைகளிலோ ஏற்பாடு செய்யும் சமய, கலாசார நிகழ்ச்சிகளில் வளவாளராகப் பங்குபற்றுதல். (இத்தகைய நிகழ்ச்சிகள் அங்குள்ள அரசாங்கங்களின்... அல்லது சமயக் கலாச்சார அமைச்சுகளின் அனுமதி பெற்றே ஒழுங்கு செய்யப்படுகின்றன. இதற்கான பயணச் செலவுகளையும் ஏற்பாட்டாளர்களே பொறுப்பேற்றுக் கொள்வார்கள்.)

*3. ஹஜ், உம்ரா போன்ற புனித பயணங்கள்.*

***விசாரணைகளின்போது இந்தத் தகவல்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளன.***

*பிறந்தது முதல் இன்று வரை இவ்வாறு இலங்கையில் வெளிப் படையாக வாழ்ந்தவன் தான் நான். எனது பாடசாலைப் பருவத்திலோ தொழில் செய்யும் காலத்திலோ* **SLJI** *இல் இணைந்து செயல்பட்ட வேளைகளிலோ நான் சமூகத்தோடு இரண்டறக் கலந்தவனாகவே இருந்திருக்கிறேன். எந்தக் கட்டத்திலும் நான் இரகசியமாக வாழ வில்லை. எனது எழுத்துக்கள், பேச்சுக்கள், செயல்பாடுகள், தொடர் புகள் அனைத்தும் வெளிப்படையானவையாகவே இருந்துள்ளன.*

*அது மட்டுமல்ல, இன்று வரையான எனது வாழ்க்கையில் நான் எந்தவொரு குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை. அவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளமை தொடர்பான எந்த குற்றச்சாட்டுக்களும் பதியப்படவில்லை. பிறருடனான எனது எந்தத் தொடர்புகளும் சட்டத்திற்குப் புறம்பானவையாகவோ அல்லது சட்டத்திற்கு புறம்பானவர்களுடனானதாகவோ இருக்கவில்லை.*

# 4. இஸ்லாத்திலுள்ள கருத்து வேறுபாடுகளோ அல்லது நாட்டிலுள்ள மத வேறுபாடுகளோ என்னை சகிப்புத்தன்மையற்றவனாக மாற்றவில்லை

*என்னுடன் மார்க்க விடயங்களில் கருத்து முரண்பட்டவர்கள் இருக்கத்தான் செய்தார்கள். மதங்களைச் சார்ந்தவர்கள் மத்தியில் பொதுவாக மதக் குழுக்கள் மற்றும் மதப் பிரிவுகள் காணப்படுவதும் அதனால் கருத்து பேதங்கள் ஏற்படுவதும் இயல்பானது என்பதை அனைவரும் அறிவர். அதே போன்று இஸ்லாத்தைப் பின்பற்று பவர்களிடமும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.*

இந்தக் கருத்து வேறுபாடுகள் காரணமாக விரல் விட்டு எண்ணத் தக்க ஒரு சிலர் பகிரங்கமாக என்னை விமர்சித்திருக்கிறார்கள். எனினும், அவர்களை பகிரங்கமாக விமர்சிக்கும் சகிப்புத்தன் மையற்ற நிலைக்கு நான் செல்லவில்லை. அவ்வாறு என்னையும் நான் சார்ந்திருந்த **SLJI** அமைப்பையும் கடுமையாக விமர்சித்து நாம் நரகத்திற்குரியவர்கள் என்று தீர்ப்பு வழங்கிய ஒருவராக ‘ஸஹ்ரான்’ இருந்திருக்கிறார். அவர் அதனை நிரூபிப்பதற்காக ஒரு சந்தர்ப்பத்தில் என்னை பகிரங்க விவாதத்திற்கு தொலைபேசி வாயிலாக அழைத்திருந்தார். நான் இஸ்லாம் குறித்து பகிரங்க விவாதங்கள் செய்யும் மனநிலை கொண்டவனல்ல என்பதனால் அவரது அழைப்பை மறுத்து விட்டேன். எனக்கும் ஸஹ்ரானுக்கு மிடையிலான அந்தத் தொலைபேசி உரையாடல் ஸஹ்ரான் மூல மாகவே குரல் பதிவு செய்யப்பட்டு **YouTube** இல் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது. ***அந்தப் பதிவேற்றத்தின் பிரதி விசாரணைக் கமிஷனுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.***

நான் மத சகிப்புத்தன்மை அற்றவன், வெறுப்புப் பேச்சில் ஈடு பட்டவன் என்று கமிஷனின் அறிக்கை என்னைக் குற்றம் சாட்டியி ருக்கிறது. முஸ்லிம்களுக்கு மத்தியில் இருக்கும் இஸ்லாமிய அமைப்புகளை அநாகரிகமாகச் சாடியோ அல்லது பிற மதங்களைச் சேர்ந்தவர்களை அநாகரிகமாக விமர்சித்தோ பெயர் வாங்கிய வனல்லன் நான். அவ்வாறு விமர்சித்ததற்கான ஆதாரங்களும் எங்குமில்லை. எனது எழுத்துக்கள் மற்றும் பேச்சுக்களை அறிந்த ஆயி ரக்கணக்கானோர் இந்த உண்மைக்கு சாட்சியாக இருக்கிறார்கள்.

சிங்கள மொழியில் எழுதுபவனாகவும் பேசுபவனாகவும் நான் இருந்திருந்தால் அவர்களுக்கும் இந்த உண்மை தெரிந்திருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

# 5. இஸ்லாம் தொடர்பில் எனது அணுகுமுறை

இஸ்லாம் தொடர்பான எனது பேச்சிலும் எழுத்திலும் ஒரு சிந்தனைப் பாணி இருந்ததை நான் இங்கு கூறியாக வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் தனது வாழ்வில் தனது மார்க்கத்திற்கு முதலிடம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதே எனது அந்த சிந்தனைப் போக்காகும். அதாவது இஸ்லாத்தை முடியு மானவரை கற்று தனது வாழ்வில் அதனை சிறப்பாக செயல்படுத்த வேண்டிய கடமைப்பாடு ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உண்டு என்பதை நான் வலியுறுத்தியிருக்கிறேன். எனினும், அந்தக் கடமைப் பாட்டை வன்முறை சார்ந்த வழிகளிலோ அல்லது சட்டத்திற்குப் புறம்பான வகையிலோ மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் நான் ஒருபோதும் இருந்ததில்லை. மாறாக, முஸ்லிமல்லாதவர்கள் கூட இஸ்லாத்தின் மீது நன்மதிப்புக் கொள்ளும் வகையில் முஸ்லிம்கள் முன்மாதிரியாக வாழ வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாக இருந்தது. அந்த எதிர்பார்ப்பை ஏமாற்றமாக மாற்றும் முஸ்லிம்களது நடைமுறைகளையும் பண்பாடுகளையும் நான் அறிவார்ந்த ரீதியில் விமர்சித்திருக்கிறேன். எனினும் எந்தவொரு இஸ்லாத்தின் போதனை யையும் செயல்படுத்தும் விடயத்தில் எந்த முஸ்லிமையும் நான் நிர்ப்பந்தித்ததில்லை.

இத்தகைய எனது சிந்தனைப் போக்கும் அணுகுமுறையும் என்னை விசாரித்தவர்களால் அறிந்து கொள்ளப்படவில்லை என்பது எனது கவலையாகும்.

# 6. இஸ்லாமிய ராஜ்யம் என்ற போலிக் குற்றச்சாட்டு

எனது விடயம் தொடர்பில் முன்வைக்கப்பட்டிருக்கும் மற்று மொரு குற்றச்சாட்டு அரபு மத்ரஸாக்களில் ஷரீஆ முழுமையாகக் கற்பிக்கப்படுவதாக நான் கூறியதாகவும் ஷரீஆ இந்த நாட்டில் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்று கூறி இஸ்லாமிய ராஜ்யம் ஒன்றை இலங்கையில் ஸ்தாபிக்க வேண்டும் என்று முஸ்லிம் களைத் தூண்டியதாகவும் கமிஷனின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அரபு மத்ரஸாக்களில் ஷரீஆ கற்பிக்கப்படுவது தொடர்பில் நான் சொன்ன விளக்கம் இதுதான்.

***இலங்கையில் தனி மனிதர்கள் தமது வாழ்வில் அமுல்நடத்தக் கூடிய மார்க்க சட்டங்கள் மத்ரஸாக்களில் கற்பிக்கப்படுகின்றன. (உதாரணம்: தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ், குடும்ப வாழ்க்கை, வியாபாரம் தொடர்பிலான சட்டங்கள்) ஏனையவை பெரும்பாலும் கற்பிக்கப்படுவதில்லை. (உதாரணம்: குற்றவியல் சட்டங்கள்) சில சந்தர்ப்பங்களில் அவை கற்பிக்கப்பட்டால்கூட இலங்கை போன்றதொரு நாட்டில் அவற்றை அமுல்படுத்த முடியாது என்ற புரிதலுடனேயே தான் அவை கற்பிக்கப்படுகின்றன.***

இவ்வாறானதொரு கருத்தையே கமிஷனில் நான் எடுத்துக் கூறினேன். எனது சிங்கள மொழியாற்றலில் போதாமை இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எனவே என்னால் கூறப் பட்ட கருத்துகள் அவர்களால் எவ்வாறு விளங்கப்பட்டிருக்கும் என்ற ஒரு பிரச்சினை இருக்கவே செய்கிறது. பின்னர் எனது சட்டத் தரணியின் ஆலோசனையின் பிரகாரம் ஒரு மொழிபெயர்ப்பாளரை கமிஷனிடம் நான் கேட்டுப் பெற்றுக் கொண்டேன்.

*எவ்வாறாயினும் இலங்கையில் ஷரீஆ சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும், இலங்கையில் இஸ்லாமிய ராஜ்யம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற சிந்தனையுடையவனாக நான் இருக்கிறேன் என்ற குற்றச்சாட்டு பல கோணங்களில் மறுக்கத் தக்கதாகும்.*

# 7. இஸ்லாமிய ராஜ்யம்: குற்றச்சாட்டுக்கான பதில்

## SLJI அங்கீகரிக்காத விடயம் இது.

*இந்த சிந்தனையுடையவனாக நான் இருந்திருந்தால் மேலும் இந்த சிந்தனையின் பால் பலரைத் தூண்டி வழிநடத்துபவனாகவும் நான் இருந்திருந்தால் எனக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபடுகின்ற முதலாவது அமைப்பாக* SLJI *இருந்திருக்கும். அதற்கான ஒரு நடை முறைச் சான்றை பின்வரும் சம்பவத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*1980களில் ஈரானில் ஆயத்துல்லா கொமைனி புரட்சியின் மூலம் அமெரிக்காவுக்கு ஆதரவாக செயல்பட்ட மன்னர் ஷாவின் ஆட்சியைக் கவிழ்த்தார். அதன்போது முஸ்லிம் உலகின் பல பாகங்களிலும் ஆயத்துல்லா கொமைனிக்கு ஆதரவான அலை பலமாக வீசியது.*

SLJI *இன் முன்னாள் தலைவர்களில் ஒருவராக இருந்த யூஸுப் ஹாஜியார் என்பவர் ஆயதுல்லா கொமைனிக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தார்.* SLJI *யும் அந்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.*

*அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான ஈரானின் நிலைப் பாட்டிற்கு ஆதரவளிப்பது வேறு; கொமைனியை ஒரு புரட்சித் தலைவராக ஏற்று அவருக்குப் பின்னால் செல்வது வேறு. அந்த இரண்டாவது நிலைப்பாட்டை* SLJI *இனால் எடுக்க முடியாது என்று*

அன்றைய சூழலில் SLJI இன் தலைவரும் ஏனைய முக்கியஸ்தர்களும் அங்கத்தவர்களும் ஒரு மனதாக எடுத்துக் கூறினர். அதனால் முன்னாள் தலைவருக்கும் ஏனையோருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து மோதல் உச்சத்தை அடைந்தது. இறுதியில் முன்னாள் தலைவரை அங்கத்துவத்திலிருந்து நீக்க வேண்டும் என்ற முடிவு எட்டப்பட்டபோது அவரே தனது பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

இந்த சம்பவம் நடைபெறும் காலத்தில் SLJI உடன் எனக்கு எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. நான் SLJI இல் அங்கத்துவம் பெற்ற காலம் சுமார் 1987 ஆகும்.

ஏற்கனவே முஸ்லிம் உலகில் புரட்சியால் உருவானதொரு அரசாங்கத்தோடு இணைய மறுத்து ஒரு தலைவரைப் பதவி நீக்கம் செய்ய முயன்ற SLJI அதற்குப் பின்னால் வந்த தலைவரொருவர் புரட்சி செய்வதையோ புரட்சிகரமான கருத்துக்களை முன்வைப்பதனையோ எவ்வாறு அங்கீகரிக்கும்?!

இஸ்லாமிய ராஜ்யம் ஒன்றை அமைப்பதற்காக முஸ்லிம்களை நான் தூண்டியிருந்தால் இந்த வகையில் எனக்கெதிரான முதல் நடவடிக்கையை SLJI தான் எடுத்திருக்கும் என்பது உறுதி.

## 8. நானும் இந்த சிந்தனைக்கெதிரானவன்

மற்றுமொரு கோணத்திலும் என் மீதான இந்தக் குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். இன்னுமொரு சம்பவம் இதற்கான சான்றாக அமைகிறது.

அந்த சம்பவத்தின் சூத்திரதாரி அப்துல் கபூர் முஹம்மத் நதீர் என்பவராவார். இவர் இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி 1987இல் துவங்கப்பட்டபோது கல்லூரியின் நிர்வாகக் குழுவால் அதன் முதல் அதிபராக நியமிக்கப்பட்டவர். அதன்போது அக்கல்லூரியில் நான்

*ஓர் ஆசிரியனாக அவரின் கீழ் பணி புரிந்தேன்.*

*அவர் (மௌலவி நதீர்) ஆரம்பத்தில் தனது பணியை சிறப்பாக செய்து வந்தாலும் இடையில் ஏதோ ஒரு காரணத்தால் அவரது சிந்தனைகள் தடம்புரண்டன. அவர் மெல்ல மெல்ல மாணவர்கள் மத்தியில் கருத்துக்களை பேச ஆரம்பித்தார். அவரது கருத்துக்களின் சுருக்கமாவது:*

*"முஸ்லிமல்லாத அனைவருக்கும் பகிரங்கமாக இஸ்லாத்தை நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். முஸ்லிம்கள் ஷரீஆ சட்டத்தை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். இலங்கையின் சட்டங்களுக்கு அவர்கள் மதிப்பளிக்க வேண்டியதில்லை. இலங்கை அரசாங்கத்தின் அடையாள அட்டை, லைஸன்ஸ் மற்றும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் போன்றன எமக்கு அவசியமில்லை. எமது பிள்ளைகளை அரசாங்கப் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டியதில்லை. அந்தக் கல்வி எமக்கு எதிரானது."*

*அவரது இத்தகைய தீவிர சிந்தனைகள் மாணவர்களுக்கு மத்தியில் விதைக்கப்படுவது தொடர்பில் ஒரு சில மாணவர்கள் என்னிடம் முறைப்பட்டனர். அதனைத் தொடர்ந்து நிலைமையை கல்லூரியின் நிர்வாகக் குழு மட்டத்திற்கு நான் கொண்டு வந்தேன். அதன்போது அவர் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்ற முடிவு எட்டப்பட்டது. அவர் அவ்வாறே பதவி நீக்கம் செய்யப்பட்டார்.*

*அவர் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னரும் மாணவர்களில் பலர் அவரது கருத்துக்களால் ஒரு சிந்தனைக் குழப்பத்தில் இருந்தார்கள். அதன்போது அவர்களை இந்தக் குழப்ப நிலையில் இருந்து மீட்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. அந்த வேலையும் என் பொறுப்பில் விடப்பட்டது.*

*வகுப்பிலிருந்த 24 மாணவர்களில் ஒருவர் கூட நதீர் மௌலவியின் கருத்துக்கு ஆதரவளிக்கும் நிலை ஏற்படாமல் அவர்களை நதீர் மௌலவியின் சிந்தனைச் சிக்கல்களில் இருந்து பாதுகாக்க*

முடிந்ததையிட்டு இன்றும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நதீர் மௌலவி இஸ்லாஹிய்யாவிலிருந்து விலக்கப்பட்ட பின்னர் புத்தளத்தில் ஒரு சிலரை இணைத்துக் கொண்டு இந்தத் தீவிரவாத சிந்தனைகளை பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார். அவரோடு அக்காலப் பகுதியில் SLJI ஐச் சேர்ந்த அங்கத்தவர்களோ அல்லது SLISM ஐச் சேர்ந்த அங்கத்தவர்களோ ஒருவர் கூட இணைய வில்லை.

1988/89ம் ஆண்டுகளில் இது நடைபெறுகிறது.

கமிஷனில் சாட்சி வழங்கியபோது இந்த சம்பவம் என்னால் முன்வைக்கப்பட்டது. அது கமிஷனின் அறிக்கையிலும் பதிவா கியிருக்கிறது. எனினும், கமிஷனின் அறிக்கை என்னைத் தீவிர வாதியாகவே சித்திரித்திருக்கின்றது.

# 9. கமிஷனில் எனக்கெதிராக வந்த சாட்சிகள் பற்றி...

நானறிந்த வகையில் என் மீதும் SLJI மீதும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்கள் பின்வருவோராக இருக்க வேண்டும்.

- ஞானசார தேரர் எமக்கெதிராக கமிஷனில் முன்வைத்த சாட்சி: ஞானசார தேரர் அவர்கள் சாட்சிமளிக்கும்போது SLJI உடன் ஏனைய அமைப்புகள் (மொத்தம் 43) குறித்தும் விமர்சித் திருந்தார். அந்த அமைப்புகள் அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

இது தொடர்பில் பல அமைப்புகள் ஒன்றிணைந்து ஆட்சேபணை தெரிவித்த கடிதமொன்று கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் விளைவாக ஞானசார தேரரை குறுக்கு விசாரணை செய்வ தற்கான அவகாசம் ஒன்று SLJI உட்பட ஏனைய சில அமைப்பு

களுக்கும் கமிஷனால் வழங்கப்பட்டது.

ஞானசார தேரரை குறுக்கு விசாரணை செய்த **SLJI** இன் வழக்கறிஞர் திரு. என்.எம் ஷஹீத் அவர்கள் "**SLJI** இன் முன்னாள் தலைவர் ஹஜ்ஜுல் அக்பர் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு நீதிமன்றத்தினால் நீங்கள் முன்வைக்கின்ற அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டார் என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்று வினவினார். அதற்கு ஞானசார தேரர்: "ஆம்" என்றார். அவ்வாறாயின் அவர் குற்றமற்றவர்; அவரது அமைப்பும் குற்றமற்றது என்பதை நீங்கள் ஏற்கிறீர்களா? என்று வழக்கறிஞர் கேட்டபோது, "சொல்வது எங்களது வேலை. விசாரிப்பது அவர்களது வேலை" என்று ஞானசார தேரர் கூறினார்.

ஞானசார தேரருக்கு **SLJI** பற்றி உண்மையில் எதுவும் தெரியாது. அவர் **SLJI** பற்றி **SLJI** இன் மூலங்களிலிருந்தோ முக்கியஸ்தர்களிட மிருந்தோ தகவல்களைப் பெறவில்லை. மாறாக, அவரிடம் முறை யிட்டவர்கள் யாரோ சொல்லிய கதைகளையே அவர் திருப்பிக் கூறுகிறார்.

- எமக்கெதிராக சாட்சி வழங்கிய அடுத்த நபர் இஸ்லாம் மார்க்கத்தையும் அதன் நபியான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் கீழ்த்தரமாக விமர்சிக்கும் செய்திகளை தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிடுபவர். இவர் கமிஷனில் என்னை (ஹஜ்ஜுல் அக்பரை) குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார். அது பற்றி முன்னறிவித்தல் எதுவும் கமிஷனால் எனக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

அந்தக் குறுக்கு விசாரணையின்போது அவர் என்னிடம் சொன்ன விடயம் 1995ம் ஆண்டு சிலாபம் மாதம்பைப் பள்ளிவாசலில் நடைபெற்ற மாணவர்களுக்கான நிகழ்சியொன்றில் வளவாளராகக் கலந்து கொண்ட நான் இலங்கையில் இஸ்லாமிய ஆட்சியொன்றைக்

கொண்டு வர வேண்டும் என்று பேசியதாகவும் முஸ்லிம்கள் சிறு பான்மையாக இருக்கும்போது அது சாத்தியமா? என்று அவர் கேட்ட கேள்விக்கு முஸ்லிம்கள் இந்தியாவை ஆட்சி செய்தபோது அவர்கள் சிறுபான்மையாகத்தான் இருந்தார்கள் என்று நான் பதில் கூறியதாகவும் சொன்னார்.

1995ம் ஆண்டு சம்பவத்தை என்னால் நினைவுபடுத்த முடியாது என்று கூறிய நான் அதனை மறுத்ததோடு அவ்வாறானதொரு கருத்தை நான் கொண்டிருக்கவில்லை என்பதற்கு ஆதாரமாக அத்தகையதொரு கருத்தை முன்வைத்த மாதம்பை இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி அதிபர் வெளியேற்றப்பட்டதையும் அவரால் சிந் தனைக் குழப்பத்துக்குள்ளாக்கப்பட்டிருந்த மாணவர்களை நான் பாதுகாத்ததையும் சுட்டிக் காட்டினேன்.

- எனக்கெதிரான சாட்சியத்தை வழங்கிய ஏனைய நபர்கள் **SLJI** இனாலும் அதன் இணை அமைப்பான இலங்கை இஸ்லாமிய மாணவர் இயக்கம் **(SLISM)** ஆகிய இரண்டிலிருந்தும் விலக்கப்பட்டவர்களாக இருக்கலாம். **CCD** மற்றும் **TID** என்ப வற்றில் நான் இருந்தபோது அவர்கள் எனக்கெதிரான விமர் சனங்களை முன்வைத்ததாக அதன் அதிகாரிகள் விசாரணையின் போது என்னிடம் சொன்னதை நான் கேட்டிருக்கிறேன்.

**SLJI** இலிருந்து இரு அங்கத்தவர்கள் விலக்கப்பட்டார்கள். (எனது சகோதரர் மௌலவி இப்றாஹீம் மற்றும் முன்ஸிப்) **SLISM** இலிருந்து 15 அங்கத்தவர்கள் விலக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் கீழே குறிப்பிடப்படும் ஒரே காரணத்திற்காகத்தான் இவ்வமைப்பு களிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்கள்.

2014 இல் முஸ்லிம்களுக்கெதிராக அளுத்கமையில் இடம்பெற்ற இனக் கலவரத்தைதத் தொடர்ந்து **SLISM** இன் தேசிய அமைப்பாளராக இருந்த ஸாதிக் அப்துல்லாஹ் (இவர் எனது சகோதரன் இப்றாஹீமின் மகன். புத்தர் சிலை சேதப்படுத்தல் சம்பவத்தின் பின்னர் தேடப்

பட்டு கைது செய்யப்பட்ட அதன் பிரதான சூத்திரதாரி) முஸ்லிம் களுக்கெதிராக இடம்பெறுகின்ற வன்முறைகளை தடுத்து நிறுத்த வேண்டும். வன்முறை பிரயோகிக்கப்படும்போது அதனை தடுத்து நிறுத்துவதற்காக நாமும் வீதிக்கு இறங்க வேண்டும் என்ற சிந்தனை களை பேசுபவராக மாறினார்.

இது குறித்து அவர் என்னிடமும் பேசியிருந்தார். அதன்போது சட்டத்திற்கமைவாகவும் சாத்விகமான வழிமுறைகளினூடாகவுமே இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும். வன்முறை வழியில் செல்ல முடியாது. அது எமது மார்க்கத்திற்கு முரணானது. இலங்கையின் சட்டத்திற்கு முரணானது. இயக்கத்தின் யாப்புக்கும் முரணானது என்று எடுத்துரைத்திருக்கிறேன். அப்போது ஒரு கருத்தாடலுக்காக அவர் இதனை கதைப்பதாகவே நான் கருதினேன்.

இது இவ்வாறு இருக்க ஸாதிக் அப்துல்லாஹ் தனது இயக்கமான **SLISM** இன் தலைமை மீதான நம்பிக்கையை சிதைக்கும் வகையில் அதற்கு எதிரான கருத்துக்களை அங்கத்தவர் மத்தியில் இரகசியமாக பரப்பும் வேலையில் ஈடுபட்டு வந்ததோடு தனக்கு ஆதரவான வட்ட மொன்றை உருவாக்குவதிலும் முனைப்புக் காட்டியிருக்கிறார்.

அமைப்பினுள் உட்பிளவை உருவாக்கும் இந்த முயற்சி அதன் உறுப்பினர் பலருக்கு தெரிய வந்தபோதே நிலை விபரீதமாக போகிறது என்றுணர்ந்த **SLISM** இன் உறுப்பினர்கள் சிலர் **SLISM** இன் அப்போதைய தலைவர் சுபியான் உட்பட **SLJI** இன் மூன்று மூத்த அங்கத்தவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

பிரச்சினையை ஆராய்ந்த மூவரும் அமைப்புப் பிளவுபடுவதைப் பற்றி சிந்திக்க வேண்டாம். உடனடியாக ஸாதிக் அப்துல்லாஹ்வை அமைப்பிலிருந்தும் அதன் அங்கத்துவத்திலிருந்தும் நீக்கி விடுங்கள் என்று ஆலோசனை கூற **SLISM** இன் மத்திய குழு கூடி அவர்களும் அத்தகையதொரு முடிவை எடுத்து அமைப்பின் சகல அங்கத்த வர்களுக்கும் அறிவித்தனர். ஸாதிக் அப்துல்லாஹ்வுடனான உறவுகளை துண்டித்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தினர்.

*இது நடைபெற்றது 2015ம் ஆண்டு. அதாவது புத்தர் சிலை சேதப்படுத்தல் அசம்பாவிதத்திற்கு சுமார் மூன்றரை வருடங்களுக்கு முன்பதாக..*

- *ஸாதிக்கைத் தொடர்ந்து சிறிது காலத்தில் அவரது சகோதரர் ஷாஹித் அப்துல் ஹக் என்பவரும்* **SLISM** *இலிருந்து நீக்கப் பட்டார். ஸாதிக்குடன் தொடர்புகளைப் பேணிய மேலும் 13 பேர் (மொத்தம் 15 நபர்கள்) படிப்படியாக இனங்காணப் பட்டு* **SLISM** *இலிருந்து நீக்கப்பட்டனர். அவர்களது பெயர்ப் பட்டியல் விசாரணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*ஸாதிக்* **SLISM** *இலிருந்து விலக்கப்பட்டதை ஏற்க மறுத்த அவரது தந்தை மௌலவி இப்றாஹீம்* **SLISM** *ஐ விமர்சித்தார். ஸாதிக்கை விலக்குமாறு* **SLISM** *இற்கு ஆலோசனை கூறியவர்களையும் விமர் சிக்கலானார். தொடர்ந்து* **SLJI** *அமைப்பும் அவரது பலமான விமர்சனத்துக்குள்ளாகியது.*

*இந்நிலையில்* **SLJI** *இன் அங்கத்தவராக இருந்த ஸாதிக்கின் தந்தை மௌலவி இப்றாஹீமும் அவ்வமைப்பிலிருந்து விலக்கப்பட்டார். புத்தர் சிலை சேதப்படுத்தல் அசம்பாவிதத்திற்கு சுமார் 8 மாதங்களுக்கு முன்பதாக இது நடந்தது.*

***இவ்வாறு இரு அமைப்புகளிலிருந்து விலக்கப்பட்டவர்கள் தொடர்பிலான ஆவணங்கள் கமிஷனுக்கு வழங்கப்பட்டுள்ளன.***

*ஸாதிக்குடன் தொடர்பைப் பேணிய மற்றுமொரு* **SLJI** *அங்கத்தவர் முன்ஸிப் ஆவார். ஸாதிக் விலக்கப்பட்ட அதே காலப் பகுதியில் இவரும் விலக்கப்பட்டார்.*

**SLJI** *மற்றும்* **SLISM** *ஆகிய இரு அமைப்புகளாலும் இவ்வாறு விலக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களை நாம் கமிஷனுக்கும்*

*விசாரணையாளர்களுக்கும் வழங்கியுள்ளோம். அவர்கள் எங்களைப் பற்றி சாட்சியம் கூறியிருந்தால் அதன் பொருள் அவர்கள் எங்கள் மீதான பகையுணர்வுடன் சாட்சியம் வழங்குகிறார்கள் என்பதே.*

## 10. புலனாய்வுத் துறையினருக்கு தகவல் வழங்கப்பட்டது

*ஸாதிக் அப்துல்லாஹ்* **SLISM** *இலிருந்து விலக்கப்பட்ட பின்னர் என்ன செய்தார் என்பது பற்றி நாம் அறிந்திருக்கவில்லை. எனினும் இளைஞர்கள் பலரை ஒன்றிணைத்து வகுப்புகள் நடத்திச் செல்வ தாக பின்னர் எமக்கு அறியக் கிடைத்தது. எனவே இவரைப் பற்றி புலனாய்வுத் துறையினருக்கு அறிவிப்பதே சிறந்தது என்று முடிவு செய்த நாம் அவ்வாறே அதனை அறிவித்தோம். இது நடைபெற்று 2015 இறுதிப்பகுதியிலாகும். இது தொடர்பிலான விளக்கம் எழுத்து மூலம் கமிஷனுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

## 11. ஸாதிக் தொடர்பில் என் மீது அவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டு

*இதே நேரம் ஸாதிக் அப்துல்லாஹ்வின் நடத்தை தொடர்பில் என்னிடம் விசாரணை செய்தவர்கள் அவரது முறையற்ற நடத்தை களுக்கு நானே காரணம் என்று குற்றம் சுமத்தினர்.*

*ஸாதிக்கை துருக்கிக்கும் சிரியாவுக்கும் அனுப்புவதற்கான பயண ஏற்பாடுகளை நானே செய்ததாகவும் பின்னர் ஏற்பட்ட அச்சம் காரணமாக நானே அவரை இயக்கத்திலிருந்து வெளி யேற்றியதாகவும் அவர்கள் என்மீது குற்றம் சாட்டினர்.*

*நான் அவர்களின் இந்தக் குற்றச் சாட்டுகள் தொடர்பில் பின்வரும் பதில்களை கூறினேன்.*

- எந்தவொரு நபரையும் பணம் கொடுத்து வெளிநாட்டுக்கு கல்வி கற்பதற்காக அனுப்பும் நிலையில் **SLJI** மற்றும் **SLISM** என்பன இல்லை.

- ஸாதிக் துருக்கிக்கு மூன்று மாதம் கொண்ட ஒரு கற்கை நெறிக்காக செல்வதாகவே அவரது பெரிய தந்தை என்ற வகையில் என்னிடம் கூறியிருந்தார். அந்த பயணத்திற்கான ஏற்பாடுகளை அவர் செய்திருப்பதாகவும் அவர் கூறினார். **SLISM** இன் தகவலின் படி அவர் அந்த மூன்று மாத காலத்திற்கான சம்பளமற்ற விடுமுறையையும் **SLISM** இடமிருந்து பெற்றிருந்தார்.

- ஸாதிக் சுமார் நான்கு மாதங்களின் பின்னர் நாடு திரும்பிய போது **SLISM** இன் மத்திய குழு கலந்துரையாடி அவரை மீண்டும் பணியில் இணைத்துக் கொண்டது என்பதை பின்னர் நான் அறிந்து கொண்டேன்.

- ஸாதிக் **SLISM** இருந்து விடுமுறை பெற்றதும் மீண்டும் அதிலே வந்து இணைந்ததும் அதற்கான தீர்மானங்களை எடுப்பதும் என்னுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் அல்ல. அவர்கள் மேற்கொள்ளுகின்ற இத்தகைய தீர்மானங்கள் தொடர்பில் என்னிடம் கலந்தாலோசிப்பதுமில்லை. அவருக்காக **SLJI** செலவு செய்யவுமில்லை. இப்பயணத்துக்காக அவருக்கு நான் தனிப்பட்ட முறையிலோ அல்லது **SLJI** யினூடாகவே எந்த செலவையும் செய்ததில்லை. அது மட்டுமல்ல ஸாதிக் எனது சகோதரனின் மகனாக இருந்தாரேயன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் என்னுடன் இணைந்து எந்தப் பணியிலும் ஈடுபட்டவராக இருந்ததில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

- எனது சகோதரனின் மகன் என்ற வகையில் ஸாதிக் துருக்கி சென்ற விடயம் பற்றி நான் அறிந்து கொண்டேனே தவிர எனது கட்டுப்பாட்டில் அவர் செயல்படுகிறார் என்பதனால் அல்ல.

- துருக்கி சென்ற பின் அங்கிருந்து அவர் சிரியா சென்ற விடயம் அவர் கைது செய்யப்பட்ட பின்னர் பொலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலிருந்தே தெரிய வந்தது. அந்த வாக்குமூலம் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

- ஸாதிக் எந்த வகையிலும் எப்போதும் SLJI இன் பணிகளில் என்னால் ஈடுபடுத்தப்பட்டவர் அல்ல. அந்தத் தேவை அவரின் பால் எனக்கு இருக்கவுமில்லை.

- மேற்கூறப்பட்ட காரணிகளால் ஸாதிக் தொடர்பில் என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நான் மறுத்திருந்தேன்.

## 12. அல்ஹஸனாத் ஜிஹாதை ஊக்குவிக்கவில்லை

நான் ஒரு தீவிரவாதி என்பதற்கு அவர்கள் முன்வைத்துள்ள மற்றுமொரு ஆதாரம் SLJI இன் சஞ்சிகை அல்ஹஸனாத் ஆகும். அல்ஹஸனாத் ஜிஹாதை ஊக்குவித்ததாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஜிஹாத் பற்றி அல்ஹஸனாத்தில் இடம்பெற்ற ஆக்கங்கள் சிலவற்றையும் ஆதாரமாக அவர்கள் சுட்டிக்காட்டி விசாரணை செய்தனர்.

பலஸ்தீன், ஆப்கானிஸ்தான், பொஸ்னியா போன்ற உலக நாடுகளில் முஸ்லிம்களுக்கெதிரான ஆக்கிரமிப்பு சக்திகளைக் கண்டித்தும் முஸ்லிம்கள் அந்த ஆக்கிரமிப்பு சக்திகளை எதிர்த்துப் போராடியமை பற்றி அல்ஹஸனாத் செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டது உண்மையே.

முஸ்லிம் உலகில் இடம்பெற்ற இத்தகைய போராட்டங்களின் போது முஸ்லிம்கள் அனைவரது உணர்வும் அத்தகையதாகவே இருந்தது. எனினும், பின்னர் அது மங்கிவிட்டது. எழுதி வைத்த

தினால் அல்ஹஸனாத்தின் பக்கங்களுக்குள் அது பாதுகாக்கப் பட்டிருந்தது. அன்றைய எழுத்துக்களை வாசித்தவர்களும் அது அன்றைய சூழலைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்டது என்பதை அறிந்திருந்தார்கள். அவர்கள் அவற்றைப் பாதுகாத்துப் பாடம் நடத்திக் கொண்டிருக்கவில்லை.

ஈஸ்டர் தின அசம்பாவிதங்களை அடுத்து இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக உருவாகியிருந்த புதிய சூழலில் அன்று எழுதப்பட்டவற்றை தூசு தட்டி எடுத்து வந்து இன்றைய சூழலின் கண்ணாடியால் அவற்றைப் பார்க்கின்றபோது ஒரு பிழையான புரிதல் ஏற்படுவதை உண்மையில் தவிர்க்க முடியாது. இன்று உருவாகிய தீவிரவாத செயல்பாடுகளுக்கு அந்தப் பின்னணியில் அன்று எழுதப்பட்டவையே காரணம் என்று சிலர் முடிச்சும் போடுகிறார்கள்.

நாங்கள் இந்தக் குற்றச்சாட்டுக்கு பல்வேறு வகையில் பதில் தந்துள்ளோம். அவற்றை சுருக்கி இங்கே தருகின்றேன்.

- முஸ்லிம் உலகில் அன்று நிலவிய அரசியல், போராட்ட சூழலை மையப்படுத்தியதாக செய்திகளும் ஆக்கங்களும் வெளிவந்திருக்கின்றனவே தவிர இலங்கையில் ஜிஹாத் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்ற வகையில் அவை எழுதப்படவில்லை.

- இலங்கை முஸ்லிம்கள் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட வேளைகளில் நல்லிணக்கம், சகவாழ்வு, சட்டத்திற்கு அமை வான அணுகுமுறைகள் என்பவற்றை வலியுறுத்தும் வகையி லேயே ஆக்கங்கள் அல்ஹஸனாத்தில் வெளிவந்திருக்கின்றன.

- **ISIS** போன்ற இஸ்லாமியத் தீவிரவாதங்களை தோலுரித்துக் காட்டும் வகையிலான ஆக்கங்களும் அல்ஹஸனாத்தில் வெளி வந்திருக்கின்றன. இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகளை அல்ஹஸனாத் ஒருபோதும் ஆதரித்து எழுதியதில்லை.

இவற்றுக்கு மேலாக (அதாவது கமிஷனுக்கு சொல்லப்படாத) ஒரு செய்தியையும் இங்கு குறிப்பிட வேண்டுமென்று கருது கின்றேன். அதாவது,

- ❖ அன்றைய சூழலில் உலகம் ஆதரித்தவற்றையே நாமும் ஆதரித்தோம். உதாரணமாக, சோவியத் ரஷ்யாவின் ஆக்கிர மிப்புக்கெதிரான ஆப்கான் யுத்தத்தை அமெரிக்காகூட ஜிஹாத் என்று பிரச்சாரம் செய்தது.
- ❖ அதே போன்று பலஸ்தீன் - இலங்கை நட்புறவு சங்கத்தின் தலைவராக தற்போதைய பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இருந்துள்ளார்கள்.

  ஆப்கான் மக்களினதும் பலஸ்தீன் மக்களினதும் விடுதலை உணர்வு இவ்வாறு அனைவராலும் ஆதரிக்கப்பட்ட சூழலில் அக்கால சூழல் காரணமாக அந்த விவகாரங்கள் பற்றி நாங்கள் பேசியதும் எழுதியதும் எந்தவகையில் குற்றமாகக் கருதப்பட முடியும்?
- ❖ கமிஷனுக்கு நாம் புரியவைக்க முயன்ற மற்றுமொரு விடயம் அல்ஹஸனாத் சஞ்சிகை என்பது ஓர் அச்சு ஊடகமாகும். ஊடகம் அவ்வக்காலத்தைப் பிரதிபலிக்கும் ஆவணமாக வெளி வராது போனால் அதனை ஒருவரும் வாசிக்க மாட்டார்கள்.

அதே போன்று கடந்த கால நிகழ்வுகள் பற்றிய செய்திகளையோ நிகழ்வுகளையோ பழைய ஊடகங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளும் வழக்கமுடையவர்களாக வாசகர்கள் இருப்பதுமில்லை. ஆய்வுக்காக அவற்றைத் தேடுகின்ற மாணவர்களாக இருந்தாலன்றி.

இந்நிலையில் இன்று உருவாகிய தீவிரவாதிகள் அன்றைய அல்ஹஸனாத் ஆக்கங்களால் உருவானார்கள் என்பது அடிப் படையற்ற ஏற்றுக் கொள்ள முடியாத குற்றச்சாட்டாகும். அதனை நாம் முற்றாக மறுக்கிறோம்.

# 13. தீவிரவாதிகள் எதனால் உருவானார்கள்? தீவிரவாதிகள் வழங்கிய வாக்குமூலங்கள்

*இன்றைய தீவிரவாதிகளுள் எவரையும் அல்ஹஸனாத் உருவாக்கவில்லை என்பதற்கான மற்றுமொரு ஆதாரம் தீவிரவாதிகளின் வாக்குமூலங்களாகும். தீவிரவாதிகள் தமது பிரச்சாரத்தின் போதும் தம்மீதான விசாரணைகளின்போதும் இந்த வாக்குமூலங்களைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதாவது, முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளால்தான் நாங்கள் தீவிரவாதம் நோக்கித் தூண்டப்பபட்டோம் என்பதை அவர்களே கூறுகிறார்கள்.*

*இத்தகைய வாக்குமூலங்கள் கமிஷனின் அறிக்கையிலும் வெளிவந்திருக்கின்றன. பொது பல சேனா போன்ற அமைப்புக்கள் தடை செய்யப்பட வேண்டும், ஞானசார தேரருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் போன்ற கமிஷனின் பரிந்துரைகளுக்கு அதுவே காரணம். முஸ்லிம் இளைஞர்கள் வன்முறையின் பால் தூண்டப்படுவதற்கு சிங்களத் தீவிரவாத அமைப்புகள் காரணமாக இருந்திருக்கின்றன என்பதை கமிஷன் இதன் மூலம் ஏற்றுக் கொண்டுள்ளது.*

*கமிஷனின் அறிக்கை* **Volume 1,** *பக்கம் 144 மற்றும் 145இல் ஸஹ்ரான் தாக்குதல் நடத்துவதற்கான காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. தாக்குதலுக்கு முன்தினம் மவுன்லவன்யாவில் உள்ள வீடொன்றில் ஸஹ்ரான் பேசிய பேச்சிலிருந்து அவை மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.*

*இலங்கையில் தாக்குதல் நடத்துவதற்கான 10 காரணங்களை அவர் கூறும்போது பின்வரும் அம்சங்களை குறிப்பிடுகிறார்.*

- *குளியாப்பிட்டியில்* **(BBS** *மேற்கொண்டதொரு) ஆர்ப்பாட்டத்தின்போது பன்றியின் படம் பொறித்த பதாகை ஒன்றில் அல்லாஹ் என்று எழுதப்பட்டிருந்தமை.*

- ❖ *அல்லாஹ்வுக்கு மறு பிறப்புண்டு என்று ஞானசார தேரர் கூறியமை.*
- ❖ *உயிரினும் மேலாக கருதப்படுகின்ற அல்குர்ஆனை சிதைத்துப் பொசுக்கியமை.*
- ❖ *முஸ்லிம் பள்ளிவாசல்களை உடைத்தமை.*
- ❖ *முஸ்லிம்களது பொருளாதாரத்தையும் வீடுகளையும் அழித்தமை.*
- ❖ *பொய்க் குற்றசாட்டுகளின் பேரில் முஸ்லிம்களது காணிகளை சுவீகரித்தமை.*

*முஸ்லிம்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட திகன மற்றும் பேருவளை கலவரங்களை ஸஹ்ரான் இதன்போது மேற்கோள் காட்டியிருக்கிறான்.*

*கோமிஷன் அறிக்கை* **Volume 1**, *பக்கம் 15இல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.*

*பெரும்பான்மை சமூகத்தில் காணப்படும் தீவிரவாத குழுக்களை அவர்களுடைய பாணியிலேயே எதிர்கொள்ளும் வகையில் சிறுபான்மை சமூகங்களிலும் தீவிரவாத குழுக்கள் தோற்றம் பெற்றுள்ளன. குறிப்பாக பெரும்பான்மை தீவரவாதக் குழுக்களின் சில செயற்பாடுகள்* **IS** *மற்றும் ஏனைய தீவிரவாதக் குழுக்களின் தீவிரவாத செயற்பாடுகளுக்கு வித்திட்டது. தாக்குதலுக்கு முன்னர் ஸஹ்ரான் மூலம் வெளியிடப்பட்ட இறுதிச் செய்தியில் குறித்த தாக்குதலுக்கு ஞானசார தேரர் உள்ளிட்ட ஏனைய தீவிரவாதக் குழுக் களே காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும்.*

***“மாவனல்லை சிலையுடைப்பு நடந்தது எப்படி?” ஆணைக் குழுவின் அறிக்கையிலிருந்து...***

*என்ற தலைப்பில் 05.03.2021 வெளிவந்த விடிவெள்ளி பத்திரி கையில் ஏழாம் பக்கக் கட்டுரை பின்வருமாறு கூறுகின்றது.*

***“மாவனல்லையில் புத்தர் சிலைகளுக்கு சேதங்களை ஏற்படுத்து மாறு ஸஹ்ரானினால் ஸாதிக் மற்றும் ஷாஹிதுக்கு உத்தரவு பிறப்பிக் கப்பட்டிருந்தது. இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிராக சிங்கள வர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு பழிவாங்கும் நோக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.”***

*இதே கட்டுரையில் ஸாதிக் கூறியதாக ஆணைக் குழுவின் அறிக்கை கூறும் மற்றுமொரு செய்தி இவ்வாறு பதிவாகியிருக்கிறது.*

***“புத்தர் சிலைகளை உடைக்குமாறு ஸஹ்ரான் தனக்கு உத்தர விட்டதாக ஸாதிக் தெரிவித்துள்ளார். குளியாப்பிட்டியில் பொது பல சேனா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றின் புகைப்படத்தைக் காண்பித்தே ஸாதிக் இவ்வாறானதொரு மோசமான செயல்பாட்டுக்கு உந்தப்பட்டுள்ளார். அந்தப் புகைப்படத்தில் அல்லாஹ் என்று எழுதப்பட்ட பன்றியின் படமொன்றுடன் கூடிய பதாகை ஆர்ப்பாட்டக்காரர்களால் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.”***

**Commission Report – Volume 1, Page 112**

*அதே போன்று 2019.02.10 லங்கா தீப பத்திரிகையின் 18ம் பக்கத்தில் வனாத்தவில்லு பற்றிய கட்டுரை முழுப் பக்கத்தையும் எடுத்திருந்தது. அதில் ஷாஹித் இளைஞர்களுக்கு வகுப்பு நடத்தும் படங்களுடன் வெளிச்சமிட்டுக் காட்டப்பட்ட செய்தியாக பின்வரும் அம்சம் பதிவாகியுள்ளது:*

***“பள்ளிவாசல்களை அவர்கள் உடைத்திருப்பதனால் புத்தர் சிலைகளை உடைக்க வேண்டுமென்று தலைவர் கூறியுள்ளார்.”***

*இந்தச் செய்தி பத்திரிகையில் கட்டமிடப்பட்டு பிரசுரிக்கப் பட்டிருந்தது.*

*அதேபோன்று **2021.02.27**ம் திகதி மிக அண்மையில் வெளியான* **Truth with Chamuditha** *எனும்* **YouTube** *வீடியோ நிகழ்ச்சியில்* **Chamuditha** *ஞானசார தேரரிடம் பின்வருமாறு வினாத் தொடுக்கிறார்.*

*“ஈஸ்டர் தாக்குதலுக்கு ஒரு நாளைக்கு முன்பதாக கல்கிஸ்ஸை குடியிருப்பில் வைத்து சத்தியப் பிரமாணம் செய்த சந்தர்ப்பத்தில் ஸஹ்ரான் கூறியுள்ளார்: ஞானசார தேரர் அளுத்கமை கலவரத்தை நடத்தியதன் பின்னர் தான் எனது தலை கெட்டுப் போனது. (ஒலுவ வெனஸ் வுனா) இதற்கு நீங்கள் கூறும் பதில் என்ன?” என்று ஞானசார தேரரிடம்* Chamuditha *வினவுகின்றார்.*

*ஞானசார தேரர் இந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறினாலும் வழி தவறிய இளைஞர்களின் தலைகளைக் கெடுத்த காரணம் அவர் களாலேயே கூறப்பட்டிருக்கிறது என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது.*

*இந்த இரு பக்கத் தீவிரவாதிகளும் (முஸ்லிம் தீவிரவாதிகள், சிங்கள தீவிரவாதிகள்) செய்த தவறுகள் அப்பாவியானதொரு மூன்றாம் தரப்பின் மீது போடுவதற்கு எத்தனிக்கப்படுகிறது தற்போது...*

## 14. என்னை அறிந்தவர்கள் என்னை தீவிரவாதியாகப் பார்க்கவில்லை

*என் மீதான தீவிரவாதக் குற்றச்சாட்டை மற்றுமொரு கோணத்திலும் நான் மறுக்கிறேன். தற்போதைய எனது வயது 60 ஐ எட்டியிருக்கிறது. இதுவரை காலமும் எனது சமூகத்தின் மத்தியில் வளர்ந்திருந்த என் மீதான நன்மதிப்பை இந்தக் குற்றச்சாட்டு கிள்ளுக்கீரையாக்க முயற்சிக்கின்றது.*

*நான் எனது சமூகத்தில் குறிப்பிடத்தக்களவு அறியப்பட்டவன். எனது எழுத்துக்களும் பேச்சுக்களும்தான் இறைவன் உதவியால் அந்த நன்மதிப்பை எனக்கு ஈட்டித் தந்துள்ளன. வேறு வார்த்தையில்*

*கூறினால் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன் தரும் வகையில் அமைந்த எனது சிந்தனைகள்தான் அந்த நன்மதிப்புக்குக் காரணமாகும்.*

*அத்தகைய சிந்தனைகள், கருத்துக்கள் வாயிலாக என்னை அறிந் தவர்கள், என்னுடன் பழகியவர்கள் என்னால் பயனடைந்தவர்கள், நான் பயன்பெறுவதற்கு உதவியர்கள் என ஆயிரக்கணக்கானோரின் ஒரு பெருவட்டம் இருக்கிறது. ஒரு மனிதனை மதிப்பீடு செய்வதில் அத்தகையவர்களின் சாட்சிகளுக்கு இடம்கொடுக்கப்படுகிறதா? என்பது என்னைப் பொறுத்தவரை ஒரு பிரதான கேள்வியாகும். என்னை அறியாதவர்கள், ஏதோ ஒரு காரணத்தால் என்னோடு முரண்படுபவர்கள், நாட்டின் சட்டத்தை மீறி குற்றம் புரிந்தவர்கள் சிலரின் சாட்சிகளுக்கு பெரு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப் பதாகவே நான் கருதுகிறேன்.*

*நான் விடுதலை செய்யப்பட்ட மறுநாள் என்னைச் சந்திக்க சமூகத் தலைவர்கள் பலரும் வந்தனர். முஸ்லிம் சமூகத்தில் என்னை அறிந்த முக்கியஸ்தர்கள் அனேகர் இருக்கிறார்கள். அவர்களது நல்லுள்ளங்களின் பெறுமானங்களைப் புறக்கணித்து விட்டு ஸஹ்ரான் மற்றும் ஸாதிக் போன்றோரின் ஏப்ரல் 21 தீவிரவாதச் சூழியில் என்னையும் சிக்கவைப்பதற்கு முயற்சிக்கப்பட்டிருப்பதானது நீதியின் முதுகில் விழுந்த சம்மட்டியே.*

# 15. மக்களது மனப்பாங்கும் தீவிரவாதத்திற்கு எதிரானதே

*பொதுவாக தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங் களில் தமிழ் மக்களோடும் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழு கின்ற பிரதேசங்களில் சிங்கள மக்களோடும் இலங்கை முஸ்லிம்கள் நல்லுறவு பேணி வருகின்றவர்கள். ஏனைய சமூகங்களோடு மோதலை ஏற்படுத்திக் கொள்வதை அவர்கள் விரும்புவதில்லை.*

*அத்தகையதொரு சமூகத்தில் இஸ்லாமிய ராஜ்யம் அமைக்கும் கோரிக்கையை முன்வைத்து முஸ்லிம்களை நான் துண்டாடுபவ னாக இருந்திருந்தால் எனது சமூகம் தான் எனது முதல் எதிரியாக மாறியிருக்கும். ஸஹ்ரானின் தீவிரவாதத்தை எதிர்த்து நிராகரித்தது போன்று என்னையும் சமூகம் நிராகரித்திருக்கும் ஆனால், அதற்கு மாற்றமாக எனது சமூகம் எனது எழுத்துக்களையும் பேச்சுக்களையும் சிந்தனைகளையும் அங்கீகரித்ததற்கான அடையாளங்களே அதிகம் இருக்கின்றன.*

***2019.08.25 அன்று நான் கைது செய்யப்பட்டபோது எனக்கு ஆதரவாக எழுதியவர்கள், பேசியவர்கள், பிரார்த்தனை புரிந்தவர்கள், என்னை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தவர்கள் அல்லது தீர்மானம் நிறைவேற்றியவர்கள்... என பல வகையானவர் களை சமூகம் கண்டது.***

*துரதிஷ்டவசமாக என்னைப் பற்றிய அறிமுகம் சகோதர சமூ கங்களுக்குக் கிடைக்காததனால் சிங்கள மீடியாக்கள் பரப்பிய பொய்களை அவர்கள் நம்பினார்கள். எனினும், முஸ்லிம்கள் நம்ப வில்லை. சிங்கள மீடியாக்களுக்கு என்னைப் பற்றிய அறிமுகம் இருக்கவில்லை என்பதும் இதற்கொரு காரணமாகும்.*

*ஒரு மனிதனைப் பற்றிய உண்மையை விளங்கிக் கொள்வதற்கு இன்றைய அறிவியல், ஆராய்ச்சி உலகில் முறைமைகள் நிறையவே இருக்கின்றன... அத்தகைய அறிவியல், ஆராய்ச்சி முறைமைகளுக்கு இடம் தராத வகையில்தான் என் மீதான குற்றச்சாட்டுகள் காணப் படுகின்றன.*

# 16. இஸ்லாமிய ராஜ்யம் சாத்தியமாவது எப்படி?

*நீங்கள்தான் கூற வேண்டும்...*

*மற்றுமொரு வகையிலும் என் மீதான குற்றச்சாட்டுக்களை நான் மறுக்கிறேன்.*

*இஸ்லாமிய ராஜ்யம் ஒன்றை உருவாக்குவதற்கு நான் போட்ட திட்டமென்ன? எனக்குப் பின்னாலிருந்த சக்திகள் எவை? இது விடயத்தில் என்னுடன் நெருங்கி ஒத்துழைத்த குழுவினர் யார்? என்று ஒருவர் வினவினால் விடை பூச்சியமாகவே இருக்கும்.*

*காரணம், அந்தக் குழுவினர்* SLJI *ஆக நிச்சயம் இருக்க முடியாது. நான் இஸ்லாமிய ராஜ்யம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தால் எனக்கெதிராக முதல் நடவடிக்கை எடுப்பவர்கள் அவர்களாகத் தானிருந்திருப்பார்கள் என்று நான் முன்னரே கூறியிருக்கிறேன்.*

*அது மட்டுமல்ல இஸ்லாமிய ராஜ்யம் என்பது* SLJI *இன் யாப்பு அங்கீகரிக்காத ஒன்றாகும்.* SLJI *துவக்கப்பட்ட காலப் பகுதியிலிருந்தே யாப்பு நடைமுறை* SLJI *இல் இருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.*

*நான்கு வருடங்களுக்கொரு முறை* SLJI *இல் நடைபெறுகின்ற தலைவர் தெரிவுக்கான தேர்தலில் தொடர்ச்சியாக 24 வருடங்கள் என்னை* SLJI *இன் அங்கத்தவர்கள் தெரிவு செய்திருக்கின்றார்கள். நான் முடியாது என்று பல முறை கூறியிருந்தபோதும் அவர்கள் என்னையே மீண்டும் மீண்டும் தெரிவு செய்தார்கள். இறுதியில் இரு பதவிக் காலங்களுக்கு மேல் ஒரு தலைவர் தொடர்ச்சியாகத் தெரிவு செய்யப்படுவதை தவிர்ப்பதற்கான யாப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்ட பின்னரே என்னால் அப்பதவியிலிருந்து விடுபட முடிந்தது.*

*நான் கைது செய்யப்பட்டிருந்தபோது எனது தொலைபேசித் தொடர்புகள் நுணுக்கமாக ஆராயப்பட்டன. சட்ட விரோதமான வர்களுடன் எனது உறவுகள் இருக்கவில்லை என்பதே அந்த ஆய் வின் முடிவாக இருந்தது.*

*அவ்வாறாயின் யாருடன் இணைந்து இந்தப் பாரிய சதித் திட்டத்தை நான் முன்னெடுத்திருப்பேன் என்று அவர்கள் தேடினார்களோ என்னவோ? முஸ்லிம் சமூகத்திலிருக்கின்ற அரசியல்வாதிகளுட னான எனது தொடர்பு பற்றி அவர்கள் விசாரணை செய்தார்கள். அவர்களுடனும் எதுவித தொடர்பும் அற்றவனாகவே நான் இருந்தேன் என்பது அந்த விசாரணையில் அவர்களுக்கு உறுதியாகியது.*

*இப்படியும் ஒரு சந்தேகத்தை எழுப்பிப் பார்த்தார்கள். அரசாங் கத்தின் உயர் பதவிகளில் பலரை அமர்த்தி அவர்கள் மூலமாக இந்த சதியை நான் செய்வதாக குற்றம் சுமத்தினார்கள். அரசாங்கத்தின் உயர் பதவிகளில் பலரை அமர்த்துமளவு நான் அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்ற ஒருவனா? என்று கேட்டேன். அது மட்டுமல்ல,* **SLJI** *இன் அங்கத்தவர்கள் அனைவரதும் பட்டியலை அவர்களிடம் கொடுத்து இந்தப் பட்டியலில் உயர் பதவி வகிப்பவர்கள் யார் என்று பாருங்கள் என்றும் கேட்டுக் கொண்டேன். அந்த ஆய்விலும் அவர்களது எண்ணத்துக்கு அடிப்படையாக அமைகின்ற தகவல்கள் ஏதும் இருக்கவில்லை.*

**SLJI *இன் யாப்பில் "வழிகாட்டல் தத்துவங்கள்" என்ற தலைப்பில் எமது செயல்பாடுகளுக்கான எல்லைகள் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றன. "கட்சியமைத்து அரசியல் செய்ய மாட்டோம்", "எந்த வெளிநாட்டு, உள்நாட்டு அமைப்புகளுடனும் கட்டுப்பாட்டு டன் கூடிய உத்தியோகபூர்வ உறவுகளை பேணாமல் சுதந்திரமாகவே செயல்படுவோம்", "இலங்கையின் சட்டத்திற்கமைவாகவே கருமமாற்றுவோம்" என எமது செயல்பாட்டு எல்லைகள் அதில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.***

இத்தனை கட்டுப்பாடுகளுடன் இருந்து கொண்டு இலங்கையில் இஸ்லாமிய ராஜ்யம் அமைப்பது எங்கனம் என்பதை நான் சிலரிடம் கேட்டிருக்கிறேன்.

ஆயுதமில்லை, சட்டத்திற்கமைவாக செயல்படுதல்தான் எமது வழிமுறை. அரசியலில்லை, உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்பு களுடன் கட்டுப்பாட்டுடன் கூடிய உத்தியோகபூர்வ உறவுகள் இல்லை, ஆரப்பாட்டங்கள் செய்யும் வழமை கூட இல்லை, ஜாம்ப வான்களான பணக்காரர்களோ அரசாங்கத்தில் உயர் பதவிகள் வகிப்பவர்களோ எங்களிடம் இல்லை, கடும் சுபாவமுடையவர்களும் எங்களோடு வந்து சேர்வதில்லை, நாமும் கடும் சுபாவமுடையவர் களை விரும்புவதுமில்லை, ஸாதிக் போன்ற தீவிரவாத சிந்தனை உடையவர்கள் முளைத்தால் **SLJI** இலோ **SLISM** இலோ அவர்களுக்கு இடமுமில்லை...

ஐயகோ! எப்படி இந்த இஸ்லாமிய ராஜ்யத்தை அமைப்பது என்று யாராவது கூறுங்கள் என்று நான்தான் கேட்க வேண்டி இருக்கின்றது.

## 17. ஹஜ்ஜுல் அக்பரின் நிலை

இந்த ஹஜ்ஜுல் அக்பருக்கு மௌலவி சான்றிதழ் இல்லை என்று கமிஷனின் அறிக்கை கூறுகிறது. அவருக்கு **B.A** தவிர்ந்த வேறு கல்வித் தகைமைகளும் இல்லை. அவர் ஒரு பணக்காரருமல்ல. பிறரோடு மோத முடியுமான சக்தி பெற்றவருமல்ல.

எனினும் அவர் ஆப்கான் சென்று யுத்தப் பயிற்சி பெற்றிருப்பதாக ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய குற்றச்சாட்டு ஏற்கனவே விசாரிக்கப்பட்ட வேளை மறுக்கப்பட்டதாகும் என்பதை இங்கு நினைவுபடுத்துகிறேன்.

தனது உடன்பிறப்பான ஒரே சகோதரனை (இப்றாஹீமை)யும் அவரது குடும்பத்தையும் தீவிரவாதப் பிரச்சினையால் பகைத்துக் கொண்டிருக்கின்ற ஹஜ்ஜுல் அக்பர் கமிஷனின் அறிக்கையால் தீவிரவாதியாக மாற்றப்பட்டிருப்பது அதிசயமானதாகும்.

ஸாதிக் அப்துல்லாஹ் குழுவமைத்து செயல்படும் நிலைக்கு போகாமலிருந்திருந்தால் அவர்களை **De radicalization** செய்வதற்கான அவகாசத்தை நான் எடுத்துக் கொண்டிருப்பேன். இரகசியமாக குழு அமைத்து செயல்பட ஆரம்பித்த பிறகு என்னால் அது முடியாமல் போய்விட்டது. இருப்பினும் அவரது வீடு சென்று பல முறை அந்த முயற்சியில் ஈடுபட்டேன். அது வெற்றி பெறவில்லை. அவர்கள் நல்ல சிந்தனைகளின் பால் திரும்பி திருந்தி வர வேண்டும் என்பதே எனது ஆவலாகவும் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது.

தீவிரவாத சிந்தனைகளிலிருந்து அவரையும் அவரது சகாக்களையும் விடுவிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமாயின் இந்த நாட்டில் செய்ய வேண்டிய முதன்மையான பணியாக அதனை நான் கருதி இரவு பகலாக உழைப்பதற்கு ஆசைப்படுகின்றேன்.

அத்தகையதொரு வேலையை செய்வதற்கு என்னால் முடியும் என்று எனது மார்க்க விளக்கங்களை செவிமடுத்த சில விசாரணை யாளர்களும் கூறியிருக்கின்றனர். அதற்கு நான் எப்போதும் தயாராக இருக்கிறேனென்றும் பதில் கூறியிருந்தேன்.

அறிக்கையும் குற்றச்சாட்டுகளும் எனக்குள் ஏற்படுத்திய கொந் தளிப்பு காரணமாக இதனை நான் பேசவில்லை. உலக நடப்புகள் எப்போதும் நல்லதாக அமைவதில்லை என்ற யதார்த்தத்தை நான் அறிந்தே இருக்கிறேன். எனினும், அந்த யதார்த்தம் சிலபோது யாரோ சிலரது நலன்களுக்காக வேறு யாரோ சிலர் பலிகொடுக்கப்படுவ தாக அமைந்துவிடும் அளவுக்குச் சென்று விடுகிறது. இருப்பினும் யதார்த்தங்களை விட்டு விரண்டோட முடியாது. யதார்த்தம் மற் றொரு காலத்தில் உண்மைக்கு சார்பானதாகவும் மாறலாம். அதுவரை பொறுமையே நல்லவர்களுக்கு உகந்தது.

# 18. இறுதியாக...

*யாராவது உணரட்டும் என்ற எதிர்பார்ப்பில் சில எதிர்பார்ப்புகளை பகிர்கின்றேன்.*

- *உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.*
- *வெடித்துச் சிதறிய தற்கொலைக் குண்டுதாரிகளுக்கும் படிப் பினைத் தண்டனைகள் வழங்கப்படல் வேண்டும்.*
- *குற்றம் செய்வதற்கு பிறரால் தூண்டப்பட்டவர்கள், சுய தூண்டல் களால் குற்றவாளிகளானவர்கள் போன்றோரை வேறுபடுத்தி தண்டனை வழங்குதல்.*
- *குற்றவாளிகளோடு தொடர்புகளைப் பேணியவர்கள் எதிர் காலத்தில் குற்றவாளிகளாகி விடாது தடுத்து விடுதல்.*
- *சந்தேகத்துக்கிடமானவர்களை திறந்த முறையில் அணுகி சந்தேகங்களற்ற சூழ்நிலைக்கு இட்டுச் செல்லுதல்.*
- *முஸ்லிம்களுக்குள் வர வேண்டிய மாற்றத்தை அவர்களும் இலங்கையர்கள் என்ற ரீதியில் அணுகி பரஸ்பரமாக முடிவு செய்தல். அப்போது திணிக்கப்பட்ட மாற்றங்களாக அவர்கள் அவற்றைக் கருத மாட்டார்கள்.*

**மக்களின் சிறந்த எதிர்காலமே நாட்டின் நல்ல எதிர்காலமாகும்.**